**605 / 13**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள் - A2



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

/ 90

பெற்றோர் கையொப்பம் : ____________________



A1 வேற்றுமை

Q1 முதல் Q5 வரையுள்ள இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து

More papers at www.testpapersfree.com

தேர்ந்தெடு. அதன் பின்னர், QAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q1. நான் நேற்று தொலைபேசியில் ______________ பேசினேன்.

(1) அவனுடைய
(2) அவனுக்கு
(3) அவனை
(3) அவனுடன் ( )

Q2. சிங்கத்துடன் போராடிய __________ காயம் ஏற்பட்டது.

(1) கரடி
(2) கரடியால்
(3) கரடிக்கு
(4) கரடியின் ( )

Q3. பயிற்சி கடினமாக இருந்ததால் __________ முழுமையாகச் செய்ய முடியவில்லை.

(1) மாணவனால்
(2) மாணவனுக்கு
(3) மாணவனின்
(4) மாணவனிடம் ( )

Q4. திருடன் __________ அவ்விடத்தை விட்டுக் கம்பி நீட்டினான்.

(1) பெட்டியில்
(2) பெட்டியுடன்
(3) பெட்டியிலிருந்து
(4) பெட்டியை ( )

Q5. சூரியன் __________ ஒளியையும் வெப்பத்தையும் தருகிறது.

(1) பூமியில்
(2) பூமியின்
(3) பூமியிலிருந்து
(4) பூமிக்கு ( )

A2 செய்யுள் / பழமொழி

Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேந்தெடு. அதன் பின்னர், QAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

Q6. _____________ விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.

(1) தெரிகிற
(2) சுடுகிற
(3) அணைகிற
(4) எரிகிற ( )

Q7. நல்லிணக்கம் _____________ அல்லற்படுத்தும்.

(1) உள்ளது
(2) வல்லது
(3) அல்லது
(4) அற்றது ( )

Q8. மகன் தந்தைக்கு __________ உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) தரும்
(2) செய்யும்
(3) அளிக்கும்
(4) ஆற்றும் ( )

Q9. அன்பிலார் எல்லாம் __________ அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(1) நமக்குரியர்
(2) தமக்குரியர்
(3) தனக்குரியர்
(3) உனக்குரியர் ( )

Q10. சுடினும் __________ தன்னொளி கெடாது.

(1) பசும்பொன்
(2) செம்பொன்
(3) கரும்பொன்
(4) அசல்பொன் ( )

A3 அடைமொழி / எச்சம்

Q11 முதல் Q15 வரையு; அடைமொழியெச்சத்தை நிறைவு செய்வதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், QAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 10 மதிப்பெண்கள் )

Q11. கலைவாணி ஓவியம் ___________ பழகினாள்.

(1) வரைந்து

(2) வரையும்
(3) வரைந்த
(4) வரைகின்ற ( )

Q12. புதன்கிழமை __________ விடுமுறை, நேற்று முடிவடைந்தது.

(1) தொடங்கும்
(2) தொடங்கிய
(3) தொடங்க
(4) தொடங்கி ( )

Q13. பட்டம் விடும் விழாவில் பலர் தங்கள் படங்களைப் __________ விட்டார்கள்.

(1) குறுகலான
(2) நீளமான
(3) அகலமான
(4) வளைவான ( )

Q14. முகிலனின் ________ பேச்சு அனைவரையும் கவர்ந்தது.

(1) அளவான
(2) இனிமையான
(3) தெளிவான
(4) தூய்மையான ( )

Q15. __________ சாலையில் வாகனங்கள் செல்லச் சிரமப்பட்டன.

(1) குறுகலான
(2) நீளமான
(3) அகலமான
(4) வளைவான ( )

<u>A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>

பின்வரும் பகுதியில் Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேந்தெடு. அதன் பின்னர் QAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 10 மதிப்பெண்கள் )

திரு அன்பனுக்கு கவிதா, வனிதா என்ற இரண்டு மககள் இருந்தனர். அவர்கள் இரட்டைப்பிறவி என்பதால் ( Q16 ) ______________ ஒரே மாதிரி இருப்பார்கள். ஆனால் மற்ற அனைத்திலும் அவர்கள் வேறுபாடு இருந்தனர். கவிதா ஆடல், பாடலில் அதிக ஆர்வம் கொண்டிருந்தாள். வனிதா எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பாள். கவிதாவைவிட அவள் கல்வியில் சிறந்து விளங்கினாள். கவிதா வனிதாவைப்போல் இலாததைக் கண்டு திரு அன்பன் வருந்தினார்.ஆனால்,

More papers at www.testpapersfree.com

திரு நண்பனின் மனைவி திருமதி மல்லிகா, " அனைவரும் ஒரே மாதிரி இருக்கமாட்டார்கள் . ஒவ்வொருவருக்கும் ஒரு தனி ( Q 17 ) ________________ இருக்கும். நம் மகள்களுக்கு ஊக்கம் ( Q 18 ) ________________ அவர்கள் தங்களுக்குப் பிடித்த துறையில் நிச்சயம் சிறந்து விளங்குவாரகள்," என்று கூறினார். திருமதி மல்லிகா கவிதாவை நடனம் மற்றும் பாடல் வகுப்பில் சேர்த்தார். கவிதா ( Q 19 ) ________________ பாடலிலும் நன்கு தேர்ச்சி பெற்றாள். பாடலிலும் நன்கு தேர்ச்சி பெற்றாள். அவள் பல உலக நாடுகளில் நிகழ்ச்சிகள் படைத்துப் பெரும் புகழ் பெற்றாள். வனிதா கல்வியில் சிறந்து விளங்கி சிறந்த விஞ்ஞானியானாள். தம் மகள்கள் வாழ்க்கையில் ( Q 20 ) ________________ நிலையில் இருப்பதைக் கண்டு திரு அன்பன் பூரித்துப் போனார். அவர் தம் மனைவி சொன்னதில் இருந்த உண்மையை உணர்ந்தார்.

Q16. (1) திறமையில்
(2) தோற்றத்தில்
(3) வடிவத்தில்
(4) நேரில் ( )

Q17. (1) விருப்பம்
(2) மகிழ்ச்சி
(3) பொறுப்பு
(4) தன்மை ( )

Q18. (1) செய்தால்
(2) ஏற்பட்டால்
(3) கொடுத்தால்
(4) பெற்றால் ( )

Q19. (1) கல்வியிலும்
(2) இசையிலும்
(3) படிப்பிலும்
(4) ஆடலிலும் ( )

Q20. (1) உயரமான
(2) சிறந்து
(3) உன்னத
(4) தேறிய ( )

More papers at www.testpapersfree.com

B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

மலேசியாவிலுள்ள லங்காவி ஓர் அழகிய தீவாகும். சுற்றிலும் எழிலான இயற்கைக்கு காட்சிகள் இருக்கும்.இந்த இடத்துக்கு நிறைய சுற்றுப்பயணிகள் வருவாரகள். இத்தீவிலிருக்கும் ஒரு சிறிய குடிசையில் திரு ரவி என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் நல்ல மனம் படைத்தவர். அவர் தம் முதிர்ந்த வயதிலும் தம்மால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்து வந்தார் அவருடைய நற்பண்பு அத்தீவு மக்களை அதிகம் கவர்ந்தது.

நல்ல மனம் படைத்த திரு ரவிக்கு ஒரு விசித்திரமான சக்தி இருந்தது. அவருக்கு கடந்த காலத்தில் நடந்தவற்றையும் எதிர்காலத்தில் நடக்கபோவதையும் அறியும் சக்தி இருந்தது. அவர் கனவுகளின் முலம் அவற்றை அறிந்து வந்தார் அத்தகைய ஆற்றலால் அவர் மக்களுக்கு பல உதவிகள் செய்தார் ஒருநாள் இரவு அவர் ஒரு கனவு கண்டார். அக்கனவில் கனத்த மாறியினால் பெருவெள்ளம் வரப்போவதாக அறிந்தார்.

More papers at www.testpapersfree.com

எனவே அவர் அத்தீவிலுள்ள மக்களை காப்பற்ற எண்ணினார். அவர் பக்கத்தில் உள்ள மலைக்குச் சென்றால் பாதுகாப்பாக இருக்கலாமென கூறினார். அவர் வார்த்தையை நம்பி மக்களும் அவ்வாறே செய்தனர். அவர்கள் மலையில் பல நாட்கள் நலமாகக் கழித்தனர். அதன் பிறகு அறுவடைக் காலம் வந்தது. கூடியிருந்த மக்களில் சிலர் தீவுக்குத் திரும்ப எண்ணினர். மழை இன்னும் நிற்கவில்லை. வெள்ளமும் குறையவில்லை. இருப்பினும் புறப்பட ஆயத்தமானார்கள். பெரியவர் எவ்வளவோ தடுத்தும் அவர்ஹல் பேச்சைக் கேட்காமல் தீவுக்குத் திரும்பினர்.

மலையில் இருந்தவர்கள் மேலும் சில நாட்கள் பெரியவரோடு எவ்விதக் குறையுமில்லாமல் கழித்தனர். ஒருநாள் வெள்ளம் குறைந்ததைக் கனவின் மூலம் அறிந்த திரு ரவி அனைவரையும் அழைத்துக் கொண்டு தீவுக்குச் சென்றார். திரும்பும் வழியில் அவசரப்பட்டு வந்தவர்கள் இறந்து கிடப்பதை திரு ரவியும் மற்றவர்களும் பார்த்தனர். தங்கள் உயிரைக் காப்பாற்றிய திரு ரவியை மக்கள் நன்றியுடன் வாழ்த்தினர்.

Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேந்தெடு. அதன் பின்னர், QAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)

Q21. திரு ரவி லங்காவி தீவுக்கு என்னென்ன தீமைகள் வரப்போவதாக சொன்னார்?

(1) நோய் வரப்போவதாகச் சொன்னார்.
(2) கொடிய விலங்குகள் வரப்போவதாகச் சொன்னார்.
(3) கொடிய பஞ்சமும் பிணியும் வரப்போவதாகச் சொன்னார்.
(4) மாறியும் வெள்ளமும் வரப்போவதாகச் சொன்னார். ( )

Q22. மக்களில் சிலர் எதற்காக மலையிலிருந்து விரைவாக ஊர் திரும்பினர்?

(1) மலையில் வசதி போதாததால் திரும்பினர்.
(2) சோம்பலாகக் காலத்தைக் கழிக்.க பிடிக்காததால் திரும்பினர்.
(3) அறுவடை செய்யத் திரும்பினர்.

More papers at www.testpapersfree.com

(4) சொந்தத் தீவை பார்க்கத் திரும்பினர். ( )

Q23. மக்கள் ஏன் திரு ரவியை நன்றியுடன் வாழ்த்தினர்?

(1) அவர் நல்ல மனம் கொண்டவராக இருந்ததால்
(2) அவர் வரப்போகும் விபத்தை பற்றிக் கூறியதால்
(3) அவர் அவர்களின் உயிரைக் காப்பாற்றியதால்
(4) அவர் பல உதவிகள் செய்ததால் ( )

<u>சொற்பொருள்</u>

வினா Q24 முதல் Q25 வரை, இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேந்தெடு. அதன் பின்னர், QAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(4 மதிப்பெண்கள்)

Q24. எழிலான

(1) அழகான
(2) எளிமையான
(3) தூய்மையான
(4) சீரான ( )

Q25. ஆயத்தமானார்கள்

(1) விரும்பினார்கள்
(2) முடிவெடுத்தார்கள்
(3) சென்றார்கள்
(4) தயாரானார்கள் ( )

More papers at www.testpapersfree.com

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்


பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையை தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 8 மதிப்பெண்கள் )

| | | |
|---|---|---|
| Q26 | என் மாமா ஒரு காவல் அதிகாரி. அவர் ஜூரோங் காவல் நிலையத்தில் ___________ புரிகிறார். | Q26 ( ) |
| Q27 | குணா தன்னுடைய உணவை ருசித்து உண்டான். அப்போது உணவு சட்டையில் விழுந்துவிட்டதால் அதில் ___________ பதிந்துவிட்டது. | Q27 ( ) |
| Q28 | அத்தை மீன் குழம்பு சமைக்க எண்ணினார். அதனால், அவர் _________ வாங்க கடைக்குச் சென்றார். | Q28 ( ) |
| Q29 | காணாமல் போன குழந்தை கிடைத்த செய்தியைக் கேட்ட தாயார் பேரானந்தம் | Q29 ( ) |

| | | |
|---|---|---|
| | அடைந்தார். அவர் குழந்தையைக் கட்டி ________ முத்தம் கொடுத்தார். | |

| | |
|---|---|
| (1) கரை<br>(2) கலை<br>(3) அனைத்து<br>(4) புளி<br>(5) பனி | (6) கறை<br>(7) களை<br>(8) பணி<br>(9) அணைத்து<br>(10) புலி |

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**
**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி**




More papers at www.testpapersfree.com

<u>சிறப்பு விருந்தினர்</u>

திரு மணியம்

காத்தோங் தொகுதி

நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : ஏப்ரல் 19

நேரம் : மாலை 7 மணி

இடம் : சூர்யா திருமண

<u>நிகழ்ச்சிக்குப் பள்ளிகளோடு வரும் மாணவர்களுக்கு ......</u>

- பள்ளிக்கு ஓர் இலவச நூல்
- எழுத்தாளர்களின் கையொப்பத்தைப் பெறும் வாய்ப்பு

<u>சிறப்புக் கழிவு</u>

மாணவர்கள் கவிதை நூலைப் பாதி விலையில் பெற்றுக் கொள்ள நிகழ்ச்சி இறுதியில், வரவேற்பு அறைக்குச் சென்று ஏற்பாட்டாளரிடம்

Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. ( 10 மதிப்பெண்கள் )

Q30. புத்தக வெளியீட்டு விழா எங்கு நடைபெறுகிறது?

(1) காத்தோங்கில்
(2) சிராங்கூன் சாலையில்
(3) திருமண மண்டபத்தில்
(4) கவின் புத்தகக்கடையில் ( )

Q31. யாருக்குச் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படும்?

(1) கவிதை நூல் வாங்குவோருக்கு

More papers at www.testpapersfree.com

(2) அடையாள அட்டையை காட்டுவோருக்கு

(3) நூல் வாங்கும் மாணவர்களுக்கு

(4) நூல் வெளியீட்டுக்கு வருவோர்க்கு ( )

Q32. கவிஞருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டம் என்ன?

(1) வேல்முருகன்

(2) நாடாளுமன்ற உறுப்பினர்

(3) சிறப்பு விருந்தினர்

(4) கவியரசு ( )

Q33. புக்கிட் பஞ்சாங்கில் வசிக்கும் உன் நண்பன் பாலுவை கவிதைநூல் வெளியீட்டு விழாவுக்கு வரும்படியும் மற்றும் இவ்விழாவில் கலந்துகொள்வதால் விளையும் நன்மையையும் பற்றி ஒரு குறிப்பு வரைக. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள பாலு,

More papers at www.testpapersfree.com

இப்படிக்கு,

உன் அன்பு நண்பன் விஷ்ணு.

D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதைப்பகுதியைப் கருத்தூன்றிப் படி.

சூர்யா அன்பும், பண்பும் மற்றும் நேர்மையும் நிறைந்தவன். பிறர் பொருளுக்கு எள்ளளவும் ஆசைப்பட மாட்டான். தன் சொந்தக்காலில் நின்று நேர்மையாக உழைத்து வாழ்வதையே பெரிதும் விரும்புவான். அவனுடைய வயதான பாட்டியும் தம்பியும் அவனுடன் வாழ்ந்து வந்தார்கள்.சூர்யா பகல் முழுவதும் வயலில் உழைத்துப் பெற்ற சொற்ப வருமானம் அவன் குடும்பத்தின் உணவுச் செலவுக்கே சரியாக இருந்தது. அதனால், தம்பியைப் பள்ளிக்கு அனுப்ப அவனால் இயலவில்லை. குடும்பத்தினர் பழைய துணிகளை உடுத்தி இருந்தனர். அந்த ஆடைகள் கூட ஆங்காங்கே ஒட்டுத் தையல் போடப்பட்டிருந்தது. சூர்யா வளமையை வாடிய குடும்பத்தை எண்ணி மனம் கலங்கினான்.

வாடகை வீட்டில் வசித்து வந்த அவனால் வாடகையைக் கூட மாத மாதம் சரியாகச் செலுத்த முடியவில்லை. எனவே, சூர்யா வீட்டு உரிமையாளரின் கோபத்திற்கு அடிக்கடி ஆளானான். அதனால், அவன் பலமுறை கண்ணீர் சிந்தினான். அந்த வேதனையிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்று தெரியாமல் வருந்தினான்.

More papers at www.testpapersfree.com

இதை அறிந்த சூர்யாவின் பாட்டி அவனை அழைத்தார். அவர் அவனிடம், " நீ இப்பொழுது உழைப்பதைவிட இன்னும் கூடுதலாக உழைத்தால் பணம் கூடுதலாகக் கிடைக்கும். அப்பணத்தைச் சேமித்து வந்தால் சொந்த வீடு கூட வாங்குவதோடு, தம்பியையும் பள்ளிக்கு அனுப்பிவிடலாம், " என்று ஆலோசனை கூறினார். தன் பாட்டியின் ஆலோசனையைக் கேட்ட சூர்யா இரவில் தொழிற்சாலை ஒன்றிலும் வேலை செய்தான். பாட்டி கூறியபடியே கூடுதல் பணம் கிடைத்தது. பாட்டி அப்பணத்தை வங்கியில் போட்டு சேமித்து வைத்தார். இதை அறிந்து சூர்யா பெருமகிழ்ச்சி அடைந்தான். சொந்த வீடு வாங்க வேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்தான்.

மூன்று ஆண்டுகள் கடுமையாக உழைத்ததன் பயனாகச் சூர்யாவுடைய வங்கி கணக்கில் ஒரு வீடு வாங்கும் அளவிற்குப் பணம் சேர்ந்துவிட்டது. அவன் அப்பணத்தைக் கொண்டு தன் குடும்பத்திற்கு ஏற்ப ஒரு சிறிய வீட்டை வாங்கினான். அவனுடைய பாட்டியும் தம்பியும் எல்லை இல்லா ஆனந்தம் அடைந்தனர். சூர்யா தன்னிடம் மீதமிருந்த சேமிப்புப் பணத்தைக் கொண்டு தன் தம்பியைப் பள்ளிக்கு அனுப்பி வைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான்.

வினா 34 முதல் வினா 40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளை கண்டறிந்து எழுது. ( 22 மதிப்பெண்கள்)

Q34. சூர்யா எத்தகைய குணம் உடையவன்? (2 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

__________

Q35. சூர்யாவின் குடும்பம் வறுமையில் வாடுகிறது என்பதை எவ்வாறு அறியலாம்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

__________

More papers at www.testpapersfree.com

Q36. சூர்யா பலமுறை கண்ணீர் சிந்தியதற்கு காரணம் என்ன? (3 மதிப்பெண்கள் )

Q37. பாட்டி பேரனுக்கு என்ன ஆலோசனை கூறினார்? (3 மதிப்பெண்கள்)

Q38. மூன்று ஆண்டுகளில் சொந்தமாக வீடு வாங்கும் அளவிற்கு சூர்யா எப்படி பணம் சேர்த்தான்? (4 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

Q39. சூர்யா எப்போது அவன் தம்பியைப் பள்ளிக்கு அனுப்பினான்?
(3 மதிப்பெண்கள்)

Q40. இறுதியில் சூர்யா வெற்றி பெற்றதற்கு எவை காரணங்களாக அமைந்தன?
(4 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

# PAPER 6

## தொடக்க நிலை 6

| | | |
|---|---|---|
| வி 1) 4 | வி 11) 1 | வி 21) 4 |
| வி 2) 3 | வி 12) 2 | வி 22) 3 |
| வி 3) 1 | வி 13) X | வி 23) 3 |
| வி 4) 2 | வி 14) 3 | வி 24) 1 |
| வி 5) 4 | வி 15) 1 | வி 25) 4 |
| வி 6) 4 | வி 16) 2 | வி 26) 8 |
| வி 7) 3 | வி 17) 4 | வி 27) 6 |
| வி 8) 4 | வி 18) 3 | வி 28) 4 |
| வி 9) 2 | வி 19) 4 | வி 29) 9 |
| வி 10) 2 | வி 20) 3 | வி 30) 3 |
| | | வி 31) 2 |
| | | வி 32) 4 |

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

கவிஞர் வேல்முருகனின்

33) கவிதை நூல் வெளியீட்டு விழா ஏப்ரல் 19 மாலை 7 மணிக்கு சூர்யா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. அதில் ~~கவிஞர்~~ நீ கலந்து கொண்டால் ஒர் இலவச நூல் பள்ளிக்கும், எழுத்தாளரின் கையொப்பம் பெறும் வாய்ப்பும் மற்றும் அடையாள அட்டையை காட்டி கவிதை நூலை பாதி விலையில் வாங்க வாய்ப்பும் கிடைக்கும்.

34) சூர்யா அன்பும், பண்பும் மற்றும் நேர்மையும் கொண்ட குணமுடையவன்.

35) சூர்யா வயலில் உழைத்து பெற்ற வருமானம் குடும்பத்தின் உணவிற்கே சரியாக இருப்பதால் அவனால் அவன் தம்பியை பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை, மற்றும் குடும்பத்தினர் பழைய ஒட்டு போட்ட துணிகளையே அணிந்திருந்தனர். இதிலிருந்து சூர்யா குடும்பம் வறுமையில் வாடுகிறது என்பதை அறியலாம்

36) சூர்யாவால் வீட்டு வாடகையை மாதம் மாதம் சரியாக செலுத்த முடியாததால், வீட்டு உரிமையாளரின் கோபத்திற்கு அடிக்கடி ஆளாகினான். இதுவே சூர்யா பலமுறை கண்ணீர் சிந்தியதற்கு காரணம் ஆகும்.

37) பாட்டி சூர்யாவிடம் இப்பொழுது உழைப்பதை விட சற்று கூடுதலாக உழைத்தால் பணமும் கூடுதலாக கிடைக்கும். அதை சேமித்து வந்தால் சொந்த வீடும் வாங்கலாம், தம்பி-யையும் பள்ளிக்கு அனுப்பலாம் என்று அவனிடம் ஆலோசனை கூறினார்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

38) பகலில் வயலிலும் இரவில் தொழிற்சாலையிலும் வேலை செய்தான், இதனால் கூடுதலாக பணம் கிடைத்தது, அதை பாட்டி வங்கியில் சேமித்தார். சொந்த வீடு வாங்கும் இலட்சியத்தில் அல்லும் பகலும் அயராது உழைத்தான். அதன் பலனாக மூன்று ஆண்டுகளில் சொந்தமாக வீடு வாங்கும் அளவிற்கு பணம் சேர்த்தான்.

39) சூர்யா தன் குடும்பத்திற்கு ஏற்ப சிறிய வீட்டை வாங்கிய பிறகு மீதமிருந்த சேமிப்பு பணத்தை கொண்டு தன் தம்பியை பள்ளிக்கு அனுப்பினான்.

40) பாட்டியின் ஆலோசனை கேட்டு கூடுதலாக உழைத்ததும் வீடு வாங்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு அல்லும் பகலும் அயராது உழைத்தது. இவையே சூர்யா வெற்றி பெறுவதற்கு காரணங்களாக அமைந்தன.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com